

# 51 இடம் பொருள் கலைஞர்

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் பாம்பன் சாலைப் பாலம்.**





## பாம்பன் சாலைப் பாலம்


### நாட்டின் கடல் மீதான முதல் சாலைப் பாலம்!

தமிழ்நாட்டில் உள்ள மிக முக்கியமான ஆன்மிக மற்றும் சுற்றுலா தலங்களில் இராமேஸ்வரத்துக்குத் தனி இடம் உண்டு. பிற மாவட்டங்களில் உள்ள மக்கள் இங்கு வரவேண்டும் என்றால், அவர்கள் ரயில் மார்க்கமாகத்தான் வர முடியும் என்ற நிலை இருந்தது.

அந்த ரயில், ‘பாம்பன் பாலம்’ வழியாகத்தான் வர முடியும். அந்தப் பாலம் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் போடப்பட்டது. கடலில் கப்பல் வரும்போது அந்தப் பாலம், கப்பலுக்கு வழிவிட்டு விலகுவதும் மீண்டும் இணைவதும் உலகறிந்த வரலாற்றுச் செய்தி.

ஆனால், பலருக்கும் தெரியாத இன்னொரு உண்மையும் உண்டு. இராமேஸ்வரத்தையும் மண்டபத்தையும் தரை வழியில், அதாவது சாலை மார்க்கமாக இணைக்க வேண்டும் என்றும், அதற்காக ஒரு பாலம் அமைக்க வேண்டுமென்றும், அந்தப் பகுதி மக்கள் பல காலமாக கோரிக்கை வைத்து வந்தனர்.

அந்தக் கோரிக்கையை, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது, ஒன்றிய அரசிடம் கொண்டு சென்று,




தொடர்ந்து போராடியது. அதன் விளைவாக, அந்த அரும்பெரும் திட்டத்துக்கு ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்தது.

அதோடு மட்டுமல்ல. 1973-ஆம் ஆண்டு செப்டம்பர் 19 அன்று, அந்தப் பாலத்துக்கு அடிக்கல் நாட்டும் விழாவுக்கு, அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களை கலைஞர் அழைத்து வந்தது குறிப்பிடத்தக்கது.

### சமுதாயங்களை இணைக்கும் பாலம்

அடிக்கல் நாட்டு விழாவின் போது, அந்த நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்க இருந்த கலைஞர் அவர்களுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டது. அதனால், அவரால் அந்த நிகழ்ச்சியில் பங்கு கொள்ள இயலவில்லை. எனவே, பொதுப்பணித்துறை அமைச்சர் ப.உ.சண்முகம் அவர்கள் விழாவுக்குத் தலைமையேற்றார்.

ஒன்றிய அரசின் கப்பல் போக்குவரத்து அமைச்சர் ராஜ்பகதூர் வரவேற்புரையாற்ற, பிரதமர் இந்திரா காந்தி அடிக்கல் நாட்டினார்.

பின்னர் அவர் பேசும்போது, “இந்தப் பாலத்தின் மூலம் இந்தப் பகுதி மக்களுக்குப் புதுவாழ்வு கிடைக்கும் என்று நம்புகிறேன். பாலத்தின் மூலம் எப்படி இரு பகுதிகள் இணைகின்றனவோ, அதுபோல் நாம் சமுதாயங்களை ஒன்றாக இணைக்க வேண்டும்” என்றார்.

### காசியின் பெருமை இராமேஸ்வரத்துக்கும்...

அந்த விழாவில், கலைஞரால் கலந்துகொள்ள இயலாவிடினும், வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பி இருந்தார். அதில் அவர் குறிப்பிட்டிருந்ததாவது:

“நீரில் பிரிக்கப்பட்ட இராமேசுவரம் தீவை, மண்டபத்துடன் இணைக்கும் மகத்தான திட்டத்தின் அடிக்கல் நாட்டு விழாவில், தலைமை ஏற்கக் கிடைத்த வாய்ப்பைப் பெருமையாகக் கருதுகிறேன் என்றாலும், உடல்நிலை காரணமாக விழாவில் கலந்துகொள்ள இயலாமைக்கு வருந்துகிறேன்.

மண்டபம் - இராமேசுவரம் இரண்டையும் இணைக்கும் பாலம் ரூ.5.5 கோடி செலவில் கட்டப்படவிருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று.

இந்தியாவில் மிக நீளமானதும், முதன்முதலில் கடல் மீது கட்டப்படுவதுமான இந்தப் பாலம், இந்தியாவுக்குக் குறிப்பாக தமிழ்நாட்டுக்குச் சிறப்பானதாகும். தமிழக அரசின் வேண்டுகோளை ஏற்று, பாலம் அமைக்கும் முயற்சி மேற்கொண்ட ராஜ்பகதூருக்கும், அடிக்கல் நாட்டு விழாவுக்கு வந்த பிரதமருக்கும் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாலம், இரண்டு வேறு பகுதிகளில் இருக்கிற மக்களையும் ஊர்களையும் ஒன்று சேர்ப்பது மாத்திரமல்ல. பொருளாதார வளர்ச்சியில் மிகவும் முக்கிய இடம் பெறுவதும் ஆகும். இந்த வகையில் இந்தப் பாலத்தால் கிடைக்கும் பயன் மிகவும் பெரியது.

வடக்கே காசிக்கு உள்ள பெருமை, தெற்கே இராமேசுவரத்துக்கும் உண்டு. இந்தப் புகழுக்குரிய பகுதியில் விழா நடப்பதும், அதில் பிரதமர் கலந்து கொள்வதும் என்றென்றும் நினைவில் நிற்கும் நிகழ்ச்சியாகும்" என்றார்.

பகுத்தறிவுவாதி கலைஞர், மக்களின் தேவைகளைப் புரிந்துகொண்டு எழுப்பியதுதான் இந்தப் பாலம். ஆனால் மதவாத அரசியலால் சேது சமுத்திரத் திட்டத்துக்கு முட்டுக்கட்டை போடுகிறது ஒரு கும்பல். அது அந்தத் திட்டத்துக்கான முட்டுக்கட்டை அல்ல, நாட்டின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை என்பதை நாட்டு மக்கள் விரைவில் உணர்வார்கள்.

**...வலம் வருவோம்**

### பாம்பன் சாலைப் பாலத்தின் சிறப்புகள்...

- 2008 வரை இந்தியாவின் நீளமான கடல் மீதான சாலைப் பாலமாக இதுதான் இருந்தது.
- இதனுடைய நீளம் 2.2 கி.மீ.
- இந்தப் பாலத்தை 79 தூண்கள் தாங்கிப் பிடிக்கின்றன. அவற்றில் 64 தூண்கள் கடலில் உள்ளன.
- 1973-இல் அடிக்கல் நாட்டப்பட்டு, 1974 நவம்பர் 17 அன்று கட்டுமானப் பணிகள் தொடங்கி, 1988-இல் முடிவடைந்தன.
- ‘அன்னை இந்திரா காந்தி பாலம்’ என்று பெயரிடப்பட்ட இந்தப் பாலத்தை 1988 அக்டோபர் 2 அன்று அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி திறந்து வைத்தார்.

### பொறியியல் சாதனை!

இந்த பாம்பன் சாலைப் பாலம் கட்டுவதற்கு அன்றைய ஒன்றிய அரசு தேசிய நெடுஞ்சாலை மூலம் நிதி ஒதுக்கினாலும், கட்டுமானப் பணிகளை எல்லாம் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான மாநில அரசே மேற்கொண்டது. இந்தப் பாலமானது, வடக்கே வங்கக் கடலையும், தெற்கே மன்னார் விரிகுடாவையும் இணைக்கும் பாக் சந்தியில் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, இந்தப் பகுதியில் பாலம் கட்டுவதற்கான ஆய்வுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டபோதும், வடிவமைப்புத் திட்டம் தீட்டப்பட்ட போதும் பலவித இயற்கைக் கூறுகளைக் கருத்தில் கொள்ள வேண்டி இருந்தது. அவற்றில், கடல் நீர் அரிப்பு மிக முக்கியமான பிரச்சினையாக இருந்தது. அந்தப் பகுதி முழுவதுமே உப்புத் தன்மை வாய்ந்ததாக இருப்பதால், ரயில் பாலத்தின் பராமரிப்பே மிகக் கடினமாக இருந்த சூழலில், சாலைப் பாலத்தில் கடலின் அரிப்பைக் குறைக்க வேண்டி மிகப்பெரும் அளவில் முன்னெச்சரிக்கைகள் மேற்கொள்ள வேண்டி இருந்தன.

இதுதவிர, அன்றைய காலகட்டத்தின் கணக்குப்படி, இராமேஸ்வரம் தீவில் உள்ள அருள்மிகு இராமநாத சுவாமி ஆலயம், ஆண்டுக்கு சுமார் 20 இலட்சம் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து வந்தது. மேலும், இங்கு பவளப் பாறைகள் அதிகம் தென்படுவதால் மீன் வளமும் செழித்திருந்தது. அந்தத் தீவை, நிலத்துடன் இணைக்க அன்று ரயிலும் படகுகளும் மட்டுமே இருந்தன.

இவற்றுக்கு எந்தத் தொந்தரவும் நேராமல், குறிப்பாக, கப்பல் போக்குவரத்துக்கு எந்தத் தடங்கலும் நேராமல் இருக்க, சாலைப் பாலத்தின் தூண்களை, ரயில் பாலத்தின் தூண்களுக்கு நேராக அமைக்க முடிவு செய்யப்பட்டு, இந்தப் பொறியியல் சாதனை எழுப்பப்பட்டுள்ளது..!

### புத்தகக் காட்சியில் ‘முத்தமிழறிஞர் பதிப்பகம்’!



முத்தமிழறிஞர் கலைஞரின் மூத்த பிள்ளையான ‘முரசொலி’யில் கழக இளைஞர் அணியின் முன்னெடுப்பாகத் தொடங்கப்பட்ட ‘முரசொலி பாசறைப் பக்கம்’ வெற்றிகரமாக ஓராண்டை எட்டியிருக்கிறது. இந்தத் தருவாயில் இளைஞர் அணியின் புதிய பாய்ச்சலாக ‘முத்தமிழறிஞர் பதிப்பகம்’ உருவாக்கப்பட்டு, கழகத் தலைவர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்கள். ‘முரசொலி பாசறை’ பக்கத்தில் கடந்த ஓராண்டாகப் பல்வேறு தலைப்புகளில் தொடராக வெளியாகி வந்த அரிய கட்டுரைகள் 9 நூல்களாக வடிவம் பெற்றுள்ளன. அவற்றையும் கழகத் தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். ஜனவரி 3 முதல் 21 ஆம் தேதிவரை நடைபெறவுள்ள சென்னை புத்தகக் காட்சியில் அரங்கு எண் 315 B-இல் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் பதிப்பகத்தில் இந்நூல்கள் கிடைக்கும். 9 நூல்களின் மொத்த விலை ரூ.1,950 ஆகும். புத்தகக் காட்சி அரங்கில் 10 விழுக்காடு கழிவுடன் நூல்கள் கிடைக்கும். இவற்றை வாசித்து, பரிசளித்து, திராவிட இயக்கத்தைப் பரப்பும் பணியில் ஈடுபட வாரீர் உடன்பிறப்புகளே...!

### :ப்ளாஷ்பேக்



#### உணவு பரிமாறும் வாய்ப்பு!



சுப்பிரமணியன்

1993 ஆம் ஆண்டு புதுக்கோட்டையில் கழக வளர்ச்சி நிதி அளிக்கும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதில் கலந்து கொள்வதற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வருகை தந்தார். கழகம் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்து வந்த நேரத்திலும், கலைஞரின் ஆவேசமான உரை, தொண்டர்களை உணர்ச்சிப் பெருக்கில் ஆழ்த்தியது. அப்போது நான் நகர இளைஞர் அணி துணை அமைப்பாளராகப் பொறுப்பு வகித்து வந்தேன். தலைவருக்கு மதிய உணவு பரிமாறும் வாய்ப்பைப் பெற்றேன். மதிய உணவை முடித்துக்கொண்டு அவருடன் புகைப்படம் எடுத்துக்கொள்ளும் வாய்ப்பும் கிடைத்தது. அன்றைய மாவட்டக் கழகச் செயலாளர் பெரியண்ணன், உடன் இருந்தார்கள்.

**–கே.சுப்பிரமணியன், துணைத் தலைவர், கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை, புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

### கருவூலம்

#### முதல் நாளே முத்தாய்ப்பாய் ஓர் அறிவிப்பு!

**1989 ஆம் ஆண்டு கழகம் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. கழக அமைச்சரவையின் முதல் கூட்டம் பிப்ரவரி முதல் நாள் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில், ‘அரசு மற்றும் அரசு சார்புடைய நிறுவனங்களிலும் உள்ளாட்சித் துறையிலும் ஏற்படும் காலியிடங்களில் 30 சதவிகித இடம் பெண்களுக்கு என்றும், ஆரம்பப் பள்ளிகளில் ஒன்று மற்றும் இரண்டாம் வகுப்பு ஆசிரியர்களாக பெண்களே நியமிக்கப் படுவர்’ என்றும் அறிவித்தார் கலைஞர்.**

### திராவிடத்தால் வாழ்கிறோம் 349




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.